20.06.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.112 /2019 ) திரு.கர்ணன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) பிரதிவாதி பார்த்திபன் என் உடன்பிறந்த சகோதரர் ஆவார். நான் இந்த வழக்கில் தரப்பினரா என்றால் இல்லை எனக்கு பவர் ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளது. யார் எனக்கு பவர் ஆவணம் கொடுத்துள்ளார் என்றால் பார்த்திபன் கொடுத்துள்ளார். அந்த பவர் ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் பார்த்திபன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வராததற்கு காரணம் எதுவும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் கேட்காததால் சொல்லவில்லை. நான் தான் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதால் பவர் ஆவணத்தை பற்றி நான் தான் சொல்ல வேண்டுமென்றால் சரியல்ல. பிரதிவாதி பார்த்திபன் கொடுத்துள்ள பவர் ஆவணம் பற்றி நிருபண வாக்குமூலத்தில் சொல்லாததால் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்க சட்டப்படிஅதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்குதாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து தனக்கு சொந்தமானது என்று வழக்கு போட்டுள்ளார். பட்டா வேண்டுமென்றும், வாதி வழக்கில் அவர் அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யக்கூடாதென்றும் கேட்டுள்ளார் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் சர்வே எண், அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண்121/6பி2, 1 ஏக்கர் 27 செண்டில் 52 செண்டு விற்பனை செய்தது போக மீதி 75 செண்டு. எனது சகோதரர் பாாத்திபனுக்கு 75 செண்டு ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் வேலுக்குப் பாத்தியப்பட்டு பின்னர் பாலசுப்பிரமணியன், ராஜ், சரஸ்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதி பார்த்திபன் கிரையம் பெற்றுள்ளார். மேற்படியார்கள் கிரையம் மூலம் பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம். அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் ராஜ் என்பவர் தமிழ்நாடு அரசு வழங்கிய பட்டா எண்.031284 பட்டா பாஸ்புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அதன் அசலை விற்பனை செய்த நபருக்கு கொடுக்கப்பட்டுள்ளது நகல் என் வசம் உள்ளது.

2) நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒளி நகல் என்பதால் தாக்கல் செய்யவில்லை. சொத்தை கிரையம் பெற்ற பொது வருவாய்துறை ஆவணங்கள் வில்லங்கம் போட்டுப்பார்த்து தான் கிரையம் பெற்றோம் என்றால் ஆமாம். ஆதியில் வேலுக்கு பாத்தியப்பட்டது என்பதை சொல்லுவதற்கு என்ன ஆவணம்

பார்த்தேன் என்றால் கிரைய ஆவணம் மற்றும் வில்லங்க சான்று பார்த்துள்ளேன். வேலு யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் வேலு லெட்சுமியம்மாளிடமிருந்து செட்டில்மெண்ட் வாங்கியதாக சொல்லுகிறார். லெட்சுமியம்மாளுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பட்டா மூலமாக பாத்தியம். பட்டா மூலம் பாத்தியம் என்பதற்கு பட்டா யாருடைய மூலம் வழங்கப்பட்டது என்றால் வருவாய்துறை மூலமாக வழங்கப்பட்டது. லெட்சுமியம்மாளுக்கு எதன் மூலம் பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. ராஜ்யிடம் பவர் ஆவணம் பெற்ற இந்த வழக்கின் பிரதிவாதி பார்த்திபன் அவரது தாயாரான சரஸ்வதியம்மாளுக்கு 22.07.2004ல் கிரையம் கொடுத்தார் என்றால் ஆமாம். அதன் பின்னர் எனது அம்மா சரஸ்வதியம்மாளிடமிருந்து எனது சகோதரர் பார்த்திபனுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான்.30.11.2011ம் தேதியிட்டு எழுதிக்கொடுத்தார். அந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தபசில் சொத்தின் 'அ' பதிவேடு நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 'அ' பதிவேட்டின் சர்வே எண்.121/6 யார் யார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் காந்திமதிநாதன், வெள்ளையன்,கோமதிநாயகம் செட்டியார் ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 'அ' பதிவேட்டில் லெட்சுமியம்மாள் பெயரில் ஏற்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. யூ.டி.ஆர்.சர்வே எண் ஆவணத்தில் லெட்சுமியம்மாள் பெயர் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.06.2025.